Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

Date of Publication : 1st of Every month    Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14    Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு : 20    அக்டோபர் 2014    கானம் : 3




Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME · NO NAME · NO SELF INTEREST · ONLY GOD

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 20 | அக்டோபர் 2014 | கானம் : 3

Delivered by India Post    www.indiapost.gov.in



17.8.2014 சென்னை ப்ரேமிக பவனத்தில் க்ருஷ்ணாவதாரம்





17.8.2014 மதுரபுரி ஆஸ்ரமத்தில் நந்தோத்ஸவத்தன்று
கோபகுடீர குழந்தைகளின் மதுர கீதம்



24.8.2014 ஜானவாஸம்



21.8.2014 ஏகாதசி கருடவாஹனம்



26.8.2014 ஆஞ்சநேய உற்சவம்



21வது ஆண்டு ப்ரும்மோத்ஸவம் 17 – 26.8.2014



சேஷ வாஹனம் 18.8.2014



18.8.2014 ஹம்ஸ வாஹனம்



ப்ரும்மஸ்ரீ பிண்டி சுப்ரமணியத்திற்கு ஸ்வர்ணபதக்கம் 25.8.2014 (பார்க்க பக்கம் 29)



25.8.2014 முன்னாள் மஹாராஷ்டிர மந்திரி ஸ்ரீ பிரஷாந்த் ஹிரே புத்தக வெளியீடு (பார்க்க பக்கம் 29)





22.8.2014 கோவிந்த பட்டாபிஷேகம்



26.8.2014 ரதோத்ஸவம்



ஸ்ரீ ஸகிதேவி ஸமேத ஸ்ரீ சக்திகிரீஸ்வரர் சிவாலய
கும்பாபிஷேகம் - செப்டம்பர் 12, சேங்கனூர்



பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்
சதாபிஷேக வைபவ தோரண வாயில்,
ஸ்ரீப்ரேமிக ஜன்மஸ்தான் திறப்பு, செப்டம்பர் 7, சேங்கனூர்






ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 20 அக்டோபர் 2014 கானம்: 3

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-223 | 03 | புராநவா - பெங்களூரு, தூத்துக்குடி | 24 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 | பாலகர்களுக்கு ஒரு கதை | 26 |
| பாகவத பழம்- ஸ்க 2/17 | 09 | பிருந்தாவன நந்தகுமாரனும் | 30 |
| தீர்மானிக்கப்பட்டது .. | 13 | மாலே மணிவண்ணா | 32 |
| விபத்தும் சம்பத்தும் ... | 15 | மஹாபெரியவாள் கருணை | 34 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 21 | | |


இறைவா,

எப்பொழுதும் நான் பணிவாகவும், பொறுமையாகவும், பொறாமை, போட்டி, கோப தாபங்களுக்கு அப்பாற்பட்டவனாகவும், விட்டு கொடுத்து போகும் மனப்பான்மை உடையவனாகவும் இருப்பதற்கு அருள் செய். ஏன் என்றால், நான் மீண்டும் பிறப்பதற்கு விரும்பவில்லை!

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

**Announcement**

To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : மோகனம்

இன்று புதிதாய் பிறந்தோம் என
புதுவாழ்வு எனக்கருள்வாய் கண்ணா
(இன்று ..)

என்னால் ஆகாதது உளதோ
எனக்கு மிஞ்சிய பொருள்தான் உண்டோ
வணக்கமில்லாமல் ஆணவத்துடன்
இறுமாந்திருந்த என் நிலை மாற்றி
(இன்று ..)

ஓயாமல் பொய் பல உரைத்து
மாயாமல் பாபங்கள் பல செய்து
காயத்தையே கருத்துடன் காத்து
தூயவன் போல் வேடமிட்ட என் நிலை மாற்றி
(இன்று ..)

உன் சேவையில் என்னை ஈடுபடுத்தி
உன் அடியார்களுடன் எனை கூட்டி
உன்னையே பாடி நினைத்து உருகி
உன் பக்தி சுவையை உணர்ந்திட அருள்வாய்
(இன்று ..)

பெயர் புகழ் பொருளில் நாட்டம் செல்லாமல்
தன்னலம் இல்லாமல் தூய்மையான மனத்துடன்
உன்னை காண்பதையே வாழ்வில் லட்சியமாக கொண்டு
நான் திண்ணமுடன் வாழ்ந்திட இன்றே அருள்வாய் (இன்று ..)

முன் அட்டை: விட்டலாபுரம் பாண்டுரங்கன் கோவிலில்; பின் அட்டை: செங்கல்பட்டு அருகே ஆத்தூர் வேதபாடசாலையில்



# மதுரமான மஹனீயர் - 223

- டாக்டர்.ஆ.பாக்யநாதன்

உத்தம குருவானவர் கற்பக வ்ருக்ஷத்தையும் விட மேலானவர். கல்பக வ்ருக்ஷம் கேட்டதை எல்லாம் தரும். குருநாதரோ, "ஆராய்ந்து அருளேலோர்" என்று ஆண்டாள் திருப்பாவையில் சொல்வது போல, நமக்கு எது நல்லதோ எது நமக்கு பக்தியை தருமோ, அவற்றையே நமக்கு அருள்வார். இதுதான் நம் குருநாதரின் அரவணைப்பில் இருக்கும் அன்பர்களின் அனுபவமாய் இருக்கும்.

25வருடங்களுக்கும் மேலாக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அரவணைப்பில் இருந்து வரும் பாபு, சுந்தர், சீனு சகோதரர்களின் குடும்பம் கும்பகோணத்தை சேர்ந்தது. அவர்களின் தங்கை அனுராதா. சிறு வயதிலேயே தாயை இழந்தபடியால், குருநாதரே தாய்க்கும் மேலாக இருந்து, இக்குடும்பத்தினரை வழிகாட்டி அருள்பாலித்து வந்தார். அத்தகைய பாக்யம் பெற்ற குடும்பம் இது. குருநாதரின் வழிகாட்டுதல்படியே இக்குடும்பத்தில் எல்லா முடிவுகளும் எடுக்கப்படுவதால், அவற்றில் குருநாதரின் முத்திரை இருக்கும். அனுராதாவின் திருமணமும் அப்படித்தான் திரு.சிவாவுடன் நடைபெற்றது.

தமது நிச்சயதார்த்தம் அன்றுதான் சிவா, குருநாதரை தரிசித்தார். மனைவி அனுராதா வீட்டில் எல்லோரும் குருநாதரை வணங்கி, அவருக்கே ஆட்பட்டு இருப்பதை பார்த்து, அவருக்கு குருநாதரிடம் முதலில் மரியாதைதான் ஏற்பட்டது. சத்சங்கத்தில் பழகப்பழக சிவாவின் ஈடுபாடானது அதிகமாகி, அப்படியே குருபக்தியாக மலர்ந்தது.

ஒவ்வொருவர் வாழ்விலும் திருப்புமுனை என்பது ஒவ்வொரு விதத்தில் இருக்கும். சிலருக்கு அந்த திருப்பு முனையே அவர்களை நெறிப்படுத்தி, குருவிடமும், தெய்வத்திடமும் அழைத்து சென்று விடும். அது வாழ்வில் ஏற்படும் வெற்றியாகவோ அல்லது ஒரு துயர சம்பவமாகவோ கூட இருக்கலாம்.

அப்படித்தான் சிவாவின் குடும்பத்தினருக்கு ஒரு பெருந்துயரம் ஏற்பட்டது. எவ்வளவு முயற்சிகள் எடுத்தும்

சிவாவினால், மனதளவில், அந்த துயரத்தின் பாதிப்பிலிருந்து விடுபடவே முடியவில்லை. அது அவரை சுழற்றி, கடுமையான மன உளைச்சலை தந்து, நிம்மதியை கெடுத்தது. ஒருவரால் தானாகவோ அல்லது பிறர் மூலமாகவோ செல்வத்தை தேடிக்கொள்ள முடியும்; அல்லது அந்தஸ்தோ, அதிகாரமோ பெற முடியும்; இப்படியே புகழ், ஆரோக்யம், வசதிகள் என்று இன்னும் பல விஷயங்களை சொல்லலாம். ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் குருவின் சன்னிதானம் மட்டுமே தர வல்லது. அது என்ன என்றால், மன நிம்மதி எனும் அழியா செல்வமே.

அப்படி மீள முடியாத துயரத்தில் இருந்த சிவாவின் வீட்டில் ஒரு பாகவத சப்தாஹத்தை நடத்த சொல்லி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அதை தாமே முன்னிருந்து துவக்கி வைத்து, நிறைவு செய்தும் அருளினார்கள். கட்டி போட்டிருந்த மனக்கஷ்டம் ஆனது, குருநாதர் அருளால், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது. அதுமுதல் வாழ்க்கையை பார்த்த கோணமும், சிவாவிற்கு முழுவதுமாக மாறி விட்டது. குருநாதர் சேவை, குருநாதர் சத்சங்கம் என்பதையே மையமாக வைத்து தன் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள ஆசைப்பட்டார்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸர், "மயிலுக்கு அபின் என்றால் மிகவும் பிடிக்கும். அதற்கு தினமும் ஒரு சமயத்தில் அதை கொடுத்து பழக்கினால், அது தானாகவே அவ்விடத்திற்கு தினமும் வரும். அதுபோல குருவின் சத்சங்க ஆனந்தம் அனுபவிக்காத வரையில்தான், ஒருவன் அதில் அதிகம் ஈடுபட மாட்டான். அதை உணர்ந்தவனோ, சத்சங்கத்தை கொஞ்சமும் விட மாட்டான்" என்பார்.

சிவாவின் வாழ்வும் அப்படித்தான் அமைந்தது. அவர் இருந்த நல்ல வேலையில், அவருக்கு வெளிநாடு போய் வரும் வாய்ப்பு அதிகம் இருந்தது. சத்சங்கத்தில் ஈடுபாடு அதிகமான பின், வெளிநாடு செல்ல நேர்ந்தால் குருநாதரையும் சத்சங்கத்தையும் பிரிய வேண்டும் என்ற நினைப்பே அவருக்கு ஓங்கி இருந்தது. அவருக்கு குருநாதர் அருகில் இருக்க ஆசை அதிகம் இருந்ததால் அவர் குருநாதரிடம் "நான் தனியாக சொந்த பிஸினஸ் செய்தால் சத்சங்கத்தில் மேலும் ஈடுபடலாமே" என்று பிரார்த்தித்து வந்தார். குருநாதரும் ஆமோதித்து, 2009 பிள்ளையார் சதுர்த்தி அன்று, சிவாவின் சொந்த பிஸினஸை துவக்கி வைத்து அருளினார்.

பிஸினஸ் என்றாலே, அதில் கொஞ்சம் கஷ்டம் ஆரம்பத்தில் இருக்கத்தானே செய்யும்? அப்படி சிவாவிற்கும்

ஏற்பட, அந்த சமயத்தில் கூட சிவா, "கஷ்டம் எப்படியும் போய் விடும். குருநாதர் நமக்கு கிடைத்தாரே" என்று இருந்தார். சத்சங்கத்துக்கு வரும் அனைத்து அன்பர்களின் குடும்பங்களில் எந்த கஷ்டம் இருந்தாலும், குருநாதர் தாமாகவே அதை கேட்டு, விசாரித்து தீர்த்து வைப்பார்கள். அப்படி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கேட்டு அருளுவதே கஷ்டத்தின் தீவிரத்தை பெருமளவு குறைத்து விடும். நாளடைவில் குருநாதரருளால் கஷ்டமும் விலகி விடும். சிவா விஷயத்திலும், குருநாதர், அவரை பார்க்கையில் எல்லாம், ஒரு தந்தைக்கும் மேலாக பிஸினஸ் பற்றி விசாரித்தருளி, சிரமத்தை விலக்கி வந்தார். நாளடைவில் அவரது பிஸினஸிலிருந்த கஷ்டம் விலகி, இப்பொழுது மிக நன்றாக நடக்கிறது.

திருமணமான வருடமே, குருநாதர் அருளால் சிவா ப்ரேமிக பவனம் அருகிலேயே ஒரு நல்ல வீடு வாங்கினார். வாழ்க்கை நன்கு சென்று கொண்டிருந்தது. அனுராதாவும் கருவுற்றாள். எதிர்பாராதவிதமாக அது கலைந்து விட்டது. அதனால் சிவாவும், அனுராதாவும் கவலை அடைந்தனர். அச்சமயத்தில் குருநாதர், "கவலை வேண்டாம். நல்லபடியாக குழந்தை பிறக்கும்" என கூறி, ஒரு இலந்தை பழத்தை பிரசாதமாய் கொடுத்து அருளினார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளினால், எந்தவிதமான complicationனும் இல்லாமல் அருமையான பெண் குழந்தை பிறந்தாள். குருநாதரே அவளுக்கு ஸ்வர்ணலதா என்று பெயர் வைத்தார்.

சத்சங்க அன்பர்கள் வாழ்வில், நல்லதோ கெட்டதோ வெற்றியோ தோல்வியோ எதுவாக இருந்தாலும் எப்பொழுதும், நாவில் மஹாமந்திரமும், நினைவில் குருநாதரும்தான் இருக்கும். எந்தவொரு சூழலிலும் நம் சத்சங்க அன்பர்கள் செய்யும் எளிதான ப்ரார்த்தனை மஹாமந்திர கீர்த்தனமே. 2013இல் சிவாவின் மனைவி ஒரு சமயம் ஷாப்பிங் செய்து திரும்பும்போது, ஆட்டோவில் விலை உயர்ந்த பொருட்களும், முக்கிய ஆவணங்களும் இருந்த அவரது ஹாண்ட் பேகை தவற விட்டார். வீட்டு சாவியும் அதில்தான் இருந்தது. தொலைந்து போன பொருள் கிடைப்பது சுலபமா என்ன? அனுராதா வருத்தமுடன், வீட்டு வாசலிலேயே அமர்ந்து மஹாமந்திரம் சொல்லி குருநாதரை ப்ரார்த்தித்தார். 11முறை சொன்னதுதான் தாமதம். வாசலில் அதே ஆட்டோ வந்து நின்றது. அந்த டிரைவர், "என் பெயர் ஸ்ரீராமுலு. இந்த பையில் "ராம ராம" என்று சப்தம் கேட்கிறது. அது செல்போனா இருக்கும் என்று நினைக்கிறேன். அதனால்

உங்களை தேடி வந்தேன்" என்று சொல்லி கொடுத்து போய் விட்டார்!

ஒவ்வொரு வருடமும் கிருஷ்ண ஜெயந்தி உற்சவத்தில், சிவா கலந்து கொள்வார். 2013இல் உற்சவம் முடிந்து, விடையாற்றி அன்று, காரில் குடும்பத்துடன் வீடு திரும்பி கொண்டிருந்தார். அப்பொழுது எதிரில் ஒரு ஜீப் வேகமாக வந்து கொண்டிருந்தது. அது ரோடின் ஓரத்தில் போடப்பட்டிருந்த பெரிய ஒயர்களின் மேல் பட்டு நிலை தடுமாறியது. முற்றிலும் கன்ட்ரோல் இழந்து, காற்றிலேயே சுழன்றது. கண் இமைத்து மூடுவதற்குள் சிவாவின் கார், அவ்விடத்தை அடைந்தது. அந்த ஜீப் அதற்குள்ளாக சாலை ஓர பள்ளத்தில் சென்று விழுந்திருந்தது. குருநாதரின் அருளினால் சிவாவிற்கும், அவர் குடும்பத்தார்க்கும், காருக்கும், எந்த வித சேதமும் ஏற்படவில்லை!! நேருக்கு நேர் அதை உணர்ந்த சிவா, குருநாதருக்கு, மனதினால் நன்றிகள் கூறி வணங்கினார்.

சிவாவின் குழந்தை டி.வி. நிகழ்ச்சி ஒன்றை பார்த்துவிட்டு ஷிம்லாவிற்கு போக வேண்டும் என்று சில மாதங்களாக கேட்டு கொண்டே இருந்தாள். ஆனால் சிவாவோ, அதை கண்டு கொள்ளவே இல்லை. அதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. சத்சங்கத்தில் கோடை விடுமுறையின்பொழுது தம்பதிகளை குருநாதரே கூப்பிட்டு, "எங்கே சுற்றுலா போக போகிறாய்?" என்று கேட்டார். பதில் சொல்லாமல் இருந்தபொழுது, அவரே "குழந்தையை அழைத்து கொண்டு ஷிம்லா போய் விட்டு வா" என்றாரே பார்க்கலாம்! தம்பதிகளுக்கும் குழந்தைக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை!

அத்துடன், நம் வாழ்வில் நடக்க கூடிய ஒவ்வொரு நொடிப்பொழுதும் நடக்கும் விஷயங்களும் அவர் அறிந்ததே என்ற எண்ணம் அவர்களுக்கு ஒரு இனம் புரியாத சந்தோஷத்தையும், தாய் பறவையின் சிறகுக்குள் இருக்கும் குஞ்சுகள் போன்ற இதமான உணர்வையும் கொடுத்தது.

இது எல்லோருக்கும் பொருந்தும் அல்லவா! அது மட்டுமல்ல நம் வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதும் அவருக்கு தெரியுமென்றால், அதை உணர்ந்தவர்களாக அவர் காட்டிய வழியில் நடந்து கொள்ள வேண்டுமே என்ற பொறுப்புணர்வு நமக்கு வேண்டுமே என்று சிறிய எண்ணம் நமக்குள் தோன்றுகிறது. அவ்வாறு நாம் வாழ குருநாதரே நமக்கு அருள வேண்டும்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: பாகவதம் துர்வாஸர், நாரதர், அகஸ்தியர் போன்ற ரிஷிகளையும் பகவான் என்று குறிப்பிடுகிறது. ராமரையும், கிருஷ்ணரையும் பகவான் என்று குறிப்பிடுகிறது. ரிஷிகளுக்கும் பகவானுக்கும் வித்யாசம் உள்ளதா?

பதில்: நீங்கள் சொல்வது போலவே, பாகவதம் துர்வாசரையும், நாரதரையும், அகஸ்தியரையும் பகவான் என்றே சொல்கிறது. பாகவதத்தை நீங்கள் நன்கு படித்திருந்தால், மற்றொன்றும் தெரிய வந்திருக்கும். அது என்னவென்றால், துர்வாசர் அம்பரீஷ மஹாராஜா மேலும், நாரதர் குபேர புத்திரர்களான நளக்கூபுரன், மணிக்ரீவன் மேலும், அகஸ்தியர் இந்திரத்யும்னன் என்கிற ராஜா மேலும் கோபப்பட்டு சாபம் தருகிறார்கள். ரிஷி சாபத்தினால், கோகுலத்தில் மரங்களாக பிறந்த குபேர புத்திரர்களையும், கஜேந்திரனாக பிறந்த இந்திரத்யும்னன் முதலை வாயில் சிக்கி கஷ்டப்படுகையிலும், பகவானேதான் அந்த சாப விமோசனத்திலிருந்து விடுவிக்கிறான் என்பதும் தெரிய வருகிறது.

மேலும் ராம, கிருஷ்ணர்களோ ஒருவருக்கும் சாபம் தந்ததாக சரித்திரம் வராது. கிருஷ்ணர் பகவானாகவே எப்பொழுதும் இருப்பவர். பகவானின் நிலையை, பகவானின் அருளால் ரிஷிகள் அடைகிறார்கள். துர்வாசர், நாரதர், அகஸ்தியர் போன்ற ரிஷிகள் மனிதனாக பிறந்து தெய்வநிலையை அடைந்தவர்கள். பகவானுக்கு அடைய வேண்டியது ஒன்றுமில்லை.

கேள்வி: தியானம் என்பது எதனால் வருகிறது? மறுபடி மறுபடி முயற்சிப்பதனாலா? அல்லது பகவானின் கிருபையினாலா?

பதில்: ராமகிருஷ்ணரின் மீது மிக்க பிரியம் கொண்டு, அவருக்கு தொண்டு செய்தவர் மதுர்பாபு என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த மதுருக்கு, குருதேவர் அடையும் சமாதி நிலையை, தானும் அனுபவிக்க வேண்டும் என்று ஆசை இருந்து வந்தது. ஒருமுறை அது கட்டுக்கடங்காமல் போய், குருதேவரை அந்நிலையை தமக்கு அருளுமாறு கேட்டுக்கொண்டார். ராமகிருஷ்ணரும் காளியிடம் பாவசமாதியை மதுர்பாபுவிற்கு தருமாறு விண்ணப்பிக்கிறார். அந்நிலை உடனே மதுருக்கு வாய்க்கிறது. மூன்று நாட்கள் அந்நிலை கலையாமல் அவர் இருக்கிறார். ஆனால் அந்நிலை அவருக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. "என்னை இந்நிலையிலிருந்து விடுவிக்க வேண்டும்" என்று ஒரு பக்தர் மூலம் ராமகிருஷ்ணரிடம் விண்ணப்பிக்கிறார் அவர். ராமகிருஷ்ணர் மறுபடி காளியிடம் "அம்மா! மதுருக்கு தந்த சமாதி நிலையை எடுத்து விடு" என முறையிடவும், அந்நிலை மதுர்பாபுவை விட்டு விலகி அவர் முன்போல் ஆகி விடுகிறார்.

ராமகிருஷ்ணர் காளியிடம் முறையிட்ட உடனேயே தியானம் சித்திப்பதும் அது கலைவதும் நடக்கிறதென்பதால், பகவானின் அருளினாலேயே தியானம் சித்திக்கிறது என்பது தெளிவாகிறது.

நாமசங்கீர்த்தனம் என்பது, எவ்வளவு எளிதான சாதனம் என்றால், அது ஒரு சாதனை என்றே சொல்லமுடியாத அளவிற்கு அது எளிமையான சாதனம்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## அறிவிப்பு

**அக்டோபர் 4 முதல் (4.10.2014) - காலை 7.20 - 7.30AM**
**ஒவ்வொரு சனிக்கிழமையும்** *பொதிகை* **தொலைக்காட்சியில்**
**"*மதுரகீதம்*" - ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகும்.**



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 5

–ஸ்ரீ ஸ்வாமிஜி (17)

பிரம்மா நாரதரிடம் தொடர்ந்து கூறுகிறார். (சென்ற இதழ் தொடர்ச்சி...) "பகவான் அனந்தன்; எல்லை இல்லாதவன். உண்மையில் அவன் முக்குணங்களான ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸிற்கு அப்பாற்பட்டவன். சிருஷ்டி, ஸ்திதி, லயத்திற்காக மாயையினால் இவை கிரஹிக்கப்படுகின்றன. உண்மையில் முக்தனாகவே இருந்த போதிலும், மாயை காரணமாக ஒரு ஜீவன், ஜீவத்வத்தை அடைகிறது. அந்த ஜீவன் ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்ற இந்த மாயையின் குணங்களான அத்யாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம் என்ற தன்மைகளால் கட்டுப்பட்டவனாகின்றான். இதனால், அவனுக்கு தேஹம், மனம், இந்திரியங்கள் எல்லாவற்றிலும் 'தான்' என்ற எண்ணம் வந்துவிடுகிறது. இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட அந்த பகவான், தன்னை இம்மூன்று குணங்களுக்குப் பின்னால் தன்னை நன்கு மறைத்து கொண்டிருக்கிறார்.

அவரே எல்லோருக்கும், எனக்கும் நியாமகனாக இருக்கிறார்."

இதன் பின் பகவானின் சிருஷ்டியைப் பற்றி விளக்கமாக வர்ணிக்கிறார் பிரம்ம தேவன்.

சிருஷ்டி செய்ய வேண்டும் என்றும், தானே பல விதமாக ஆக வேண்டும் என்றும், எண்ணம் கொண்டார் பகவான்.

தன்னிடத்திலே ஸூக்ஷ்மமாக லயித்திருக்கும் காலம், கர்மம், ஸ்வபாவம் போன்றவற்றை சிருஷ்டி நிமித்தமாக ஸ்வீகரித்துக் கொண்டார். காலத்தினால் சமநிலையில் இருந்த ஸத்வ, ரஜஸ் மற்றும் தமஸ் இவைகளின் சம நிலை மாறியது. ஸ்வபாவமானது அதில் பரிணாமத்தை உண்டு பண்ணுகிறது. கர்மத்திலிருந்து மஹத் தத்துவம் உண்டாயிற்று. இவை யாவுமே பகவானை அதிஷ்டானமாகக் கொண்டே நடக்கின்றன. ரஜஸ் மற்றும் ஸத்வ குணத்தால் விருத்தி அடைந்ததும் விகாரம்

அடைந்ததுமான மஹத் தத்துவத்திலிருந்து, தமஸ் பிரதானமாக ஒரு பொருள் வெளிவந்தது. அது த்ரவ்யம், ஞானம் மற்றும் கிரியை கொண்டு இருந்தது. அந்த பொருளுக்கு அஹங்காரம் என்று பெயர். அதுவும் மூன்று விதமாக பரிணமிக்கின்றது. வைகாரிகம் (ஸாத்விகம்), தைஜஸம் (ராஜஸம்) மற்றும் தாமஸம் என்று மூன்றுவிதமாக பரிணாமத்தை அஹங்காரம் அடைகின்றது.

தாமஸ அஹங்காரத்தில் த்ரவ்ய சக்தியும், தைஜச அஹங்காரத்தில் கிரியா சக்தியும், வைகாரிக அஹங்காரத்தில் ஞான சக்தியும் மேலோங்கி இருக்கின்றன. தாமஸ அஹங்காரம்தான் பஞ்சபூதங்களுக்கு மூலம். தாமஸ அஹங்காரம் விகாரம் அடைந்து ஆகாசம் உண்டாயிற்று. சப்தம் ஆகாசத்தின் குணம். 'த்ருக்'கான ஆத்மாவுக்கும், திருஷ்டியான வஸ்துக்களுக்கும் இதுவே அடையாளமாகும். அதேபோல், விகாரத்தை அடைகின்ற ஆகாசத்திலிருந்து, ஸ்பர்ஸம் என்ற விசேஷ குணமுடைய காற்று உண்டாயிற்று. இதில் சப்தமும் இருக்கும். பிராணன், ஓஜஸ், ஸஹஸ், பலம் என்பது வாயுவின் பல நாமங்களே! காலம், கர்ம, ஸ்வபாவம் இவற்றில் விகாரத்தை அடைக்கின்ற வாயுவிலிருந்து ரூபம் என்ற விசேஷ குணமுடைய அக்னி உண்டாயிற்று. தனது காரணமான ஆகாசம், வாயு இவற்றின் சம்பந்தத்தால் சப்தமும், ஸ்பர்சமும் அக்னிக்கும் உண்டு. தேஜஸ்ஸிலிருந்து ரஸம் எனும் விசேஷகுணமுள்ள ஜலம் உண்டாயிற்று. இதில் ரூபம், ஸ்பர்சம், சப்தம் என்ற குணங்களும் உண்டு. ஜலத்திலிருந்து, கந்தம் என்ற விசேஷ குணமுடைய பூமி உண்டாயிற்று. பூமியில் ரூப, ரஸ, கந்த, ஸ்பர்சமும் உண்டு.

சாத்வீக அஹங்காரமான வைகாரிக அஹங்காரத்தில் இருந்து மனதும் அதன் தேவதையான சந்திரனும் உண்டானார்கள். காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்ற ஐந்து ஞானேந்த்ரியங்களின் அதிஷ்டான தேவதைகளான திக், வாயு, அர்க்கன், பிரசேதஸ் மற்றும் அஸ்வினி தேவர்களும், கர்மேந்த்ரியங்களான வாக், பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவைகளின் அதிஷ்டான தேவதைகளான அக்னி, இந்திரன், உபேந்த்ரன், மித்ரன், பிரஜாபதி என்ற பத்து தேவதைகளும் சாத்வீக அஹங்காரத்திலிருந்து உண்டானவர்களே.


தைஜச அஹங்காரத்திலிருந்து பஞ்ச கர்மேந்த்ரியங்களும் பஞ்ச ஞானேந்த்ரியங்களும் உண்டாகின்றன. அதேபோல்

புத்தியும் பிராணனும் ராஜஸ அஹங்காரத்தின் கார்யங்களே. பிரம்ம ஞானிகளில் சிரேஷ்டரே (நாரதரே)! இப்படியாக சிருஷ்டிக்கப்பட்டவை ஒன்றுக்கொன்று சேரமுடியாமல், ஒரு சரீரத்தை உண்டு பண்ண முடியாமல் தவித்தன. பின் பகவானின் சக்தியால் தூண்டப்பட்டு ஒன்றுக்கொன்று சேர்ந்து சமஷ்டியான பிரம்மாண்ட சரீரத்தையும், பியஷ்டியான சரீரங்களையும் (பல ஜீவன்களின் சரீரங்கள்) சிருஷ்டித்தனர். தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த இந்த சரீரம், பல வருடங்கள் உயிரற்றதாகவே இருந்தது. அந்த அண்டத்தையும், எல்லாவற்றிற்கும் சைதன்யத்தை அளிப்பவரான பகவான் ஜீவனுள்ளதாக செய்தார்.

அந்த புருஷனே விராட் ஸ்வரூபத்துடன் ஆயிரக்கணக்கில் கைகள், கால்கள், தொடைகள், கண்கள், முகங்கள், தலைகள் இவற்றுடன் அந்த அண்டத்தை பிளந்துகொண்டு வெளிவந்தார். இந்த விராட் புருஷனின் இடுப்பின் கீழ், கீழே உள்ள ஏழு லோகங்களும், இடுப்பிற்கு மேல், மேலே உள்ள ஏழு லோகங்களும் உள்ளதாக ஞானிகள் கூறுகிறார்கள். அந்த பகவானின் முகம், கைகள், துடை, பாதங்களிலிருந்து (பிராமண, க்ஷத்ரிய என்ற) அனைத்துவித மக்களும் தோன்றினார்கள். இந்த பரமாத்மாவினுடைய இரண்டு கால்களில் பூலோகமும், நாபியில் புவர் லோகமும், ஹ்ருதயத்தில் ஸ்வர் லோகமும், மார்பில் மஹர்லோகமும், கழுத்தில் ஜன லோகமும், இரு உதடுகளில் தபோலோகமும், தலைகளில் நித்யமான சத்யலோகம் எனும் பிரம்மலோகமும் கல்பிக்கப்பட்டன.

அவருடைய இடுப்புப் பிரதேசத்தில் அதல லோகமும், துடைகளில் விதலமும், முழங்கால்களில் ஸ்ரீஹரி பக்தர்களின் வாசஸ்தலமான சுதல லோகமும், ஜங்கையில் தலாதலமும், கணுக்காலில் மஹாதலமும், முன் காலில் ரஸாதலமும், காலடிகளில் பாதாளமும் உள்ளன. அல்லது அவருடைய இரு கால்களில் பூலோகமும், நாபியில் புவர்லோகமும், தலையில் ஸ்வர்கலோகமும் உள்ளதாகவும் கூறலாம். இப்படியாக அந்த புருஷனே லோகமயமாக ஆகிறார்.

(கனியும்)




**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)

Consultant in Endocrinology and Diabetes

Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

# தீர்மானிக்கப்பட்டது .......

- ஜனனி

ஒருமுறை குருநாதரின் ஆணையின் பேரில் விஷ்ணுப்ரியாவும், அடியேனும் தொடர்ந்து 48நாட்களுக்கு காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரை, யோகிராம்சுரத்குமார் நாம ஜபம் செய்து வந்தோம். அது நடந்து கொண்டிருந்த சமயம், ஒருநாள் விஷ்ணுப்ரியா ஆச்சர்யமான ஒரு விஷயத்தை கவனித்தாள். ப்ரேமிக பவனத்தில் கீழ் அகத்தில்தான், நாங்கள் நாமம் சொல்லி வந்தோம். அங்குள்ள ஹாலின் மேலே (ceiling) பகவான் யோகிராம்சுரத்குமாருக்கே உரிய சின்னங்களான கொட்டாங்குச்சி மற்றும் விசிறியை யாரோ செதுக்கியது போல் ஒரு இம்ப்ரஷன் (impression), அங்கு தெளிவாக இருப்பதை எங்கள் எல்லோரிடமும் அழைத்து காண்பித்தாள் விஷ்ணுப்ரியா. அதைக்கண்ட நாங்கள் அனைவரும் ஆச்சர்யம் அடைந்தோம். கிட்டத்தட்ட விசிறி போன்றும் கொட்டாங்குச்சி போன்றும் இருந்து, சற்றும் நமது கற்பனையை உபயோகிக்க வேண்டுமே என்றில்லாமல், தெள்ளத்தெளிவாக அவை இரண்டும், அதுவும் ஒன்றின் அருகிலேயே மற்றொன்றும் தெரிந்து, எங்கள் அனைவருக்கும் ஆச்சர்யத்தை அளித்தது. இதை உடனே, குருநாதரிடம் காண்பிக்க வேண்டும் என்று மிகுந்த ஆவல் கொண்டோம். ஆனால், அச்சமயம் அவர் வெளியூரிலிருந்தார்.

குருநாதர் ஊர் திரும்பும் முன்பே, ஒரு விடியற்காலை எனக்கு ஒரு கனவு. அதில் குருநாதர் ஊரிலிருந்து திரும்புவதும், வாசலில் காரிலிருந்து இறங்கி வீட்டிற்குள் நுழையும்பொழுதே, அந்த சின்னங்களை பார்த்தது பற்றி விசாரித்துக் கொண்டே அதை பார்க்க உள்ளே நுழைவதும் அந்த சமயம் பார்த்து, கரண்ட் இல்லாததால் ஹாலில் வெளிச்சம் மங்கலாக இருந்ததால், அந்த சின்னங்களை அச்சமயம் குருநாதர் பார்க்க முடியாதது போலும், அதில் தோன்றிற்று. மேலும் வெளியே செல்லும்போது குருநாதர்

எங்களிடம் ஜபத்தை பற்றி விசாரிப்பது போல் அந்த கனவு முடிந்தது. மிகவும் நிஜம் போல் தோன்றிய அந்த கனவை நான் எழுந்தவுடன், விஷ்ணுப்ரியாவிடம் கூறினேன்.

இரண்டு நாட்கள் கழித்து, குருநாதர் ஊரிலிருந்து திரும்பினார். கனவில் தோன்றியது போலவே, காரிலிருந்து இறங்கி அந்த சின்னங்களை பற்றி கேட்டுக்கொண்டே உள்ளே நுழைய சரியாக அப்போது கரெண்ட் இல்லை. அதனால் குருநாதர் மாடிக்குச் சென்று கொண்டே கனவில் தோன்றியதுபோலவே, ஜபத்தை பற்றி விசாரித்து கொண்டே போனார். சின்னங்கள் தெரிந்தது ஆச்சர்யத்தை அளித்தது போல், கனவில் தெரிந்த ஒவ்வொன்றும் அப்படியே நடந்ததும் பெரிய ஆச்சர்யமாக இருந்தது.

இது குறித்து குருநாதரிடம் கூறியபொழுது அவர் மிகவும் அழகாக, "இதிலிருந்து என்ன தெரிகிறது? **Nothing is in our hands. Everything is pre-destined**" என்று கூறினார்.

**New Release From Chaitanya Mahaprabhu NamaBhiksha Kendra - Madhurasmaranam - MY GURU AS I SEE HIM - at Malaysia by Dr.A.Bhagyanathanji. Available at Madhuram - 044-23727400**



# விபத்தும் சம்பத்தும்

- பூர்ணிமாஜி

பகவான் பகவத் கீதையில் "சதுர் விதா பஜந்தே மாம் ஜனா: சுக்ருதிநோ அர்ஜுனா" என்று கூறுகிறான். இங்கு தன் பக்தர்களை பற்றி கூறும்பொழுது, ஆர்த்தி, அர்த்தார்த்தி, ஜிக்ஞாசு மற்றும் ஞானி என்று நான்கு விதமான பக்தர்களை பற்றி கூறுகிறான். ஆர்த்த பக்தன், ஒரு கஷ்டம் வரும்பொழுது இறைவனை சரண் அடைந்து பிரார்த்திப்பவன். அர்த்தார்த்தியோ தன் வாழ்க்கையை மேன்மைப்படுத்த இறைவனிடம் பிரார்த்திப்பவன். ஜிக்ஞாசு, இறைவனை அடைய பிரார்த்திப்பவன். ஞானிக்கோ பிரார்த்தனைகளே இல்லை! அவன் இறைவனை இறைவனுக்காகவே பஜிப்பவன்.

இப்படி எந்த ஒரு காரணத்திற்காக இறைவனை பஜித்தாலும், இறைவன் அவர்களை எந்த ஏற்றத்தாழ்வும் இல்லாமல், தன் பக்தர்கள் என்று அங்கீகரிக்கிறான். உலகத்தில் பெரும்பாலும் ஆர்த்த பக்தர்களையோ அல்லது அர்த்தார்த்தி பக்தர்களையோ தான் பார்க்கலாம். ஒரு துக்கம் வரும்பொழுது தான், மனிதனுக்கு இறைவனின் நினைவு வருகிறது. அதுவும் அந்த கஷ்டத்தை தன் முயற்சியாலேயே சரி செய்து கொள்ள இயலாதபோதுதான், இறைவனிடம் மனிதன் பிரார்த்திப்பான். அதையே தான் சந்த் கபீர்தாசரும் "துக் மே சுமிரன் சப் கரே ஸுக்ஹ மே கரே ந கோயி" என்று கூறுகிறார்.

இப்படி துக்கங்களே நமக்கு இறைநினைவை அளிப்பதால்தான், குந்தி தேவி பகவானிடம் தனக்கு மேலும் மேலும் துக்கங்களையும் விபத்துக்களையும் தருமாறு வரம் கேட்கிறாள்! அதுவும், எந்த ஒரு துக்கம் தனக்கு கண்ணனின் நினைவையும் அவன் தரிசனத்தையும் பெற்று தருமோ, அம்மாதிரியான துக்கங்களே தருமாறு வேண்டிக்கொள்கிறாள். நம் சாத்திரங்களில் உண்மையில், எது விபத்து, எது சம்பத்து என்று கூறும்பொழுது, "விபத் விச்மரணம் விஷ்ணோ: சம்பத் நாராயண ஸ்ம்ரிதி:" என்று கூறப்பட்டுள்ளது. இறைவனை மறந்து வாழும் ஒவ்வொரு வினாடியும் நமக்கு விபத்து தான். அவனை எண்ணுவதே பெரும் சம்பத்து! இப்படி இறை

நினைவை ஒரு விபத்து நமக்கு தருமானால், அந்த விபத்து கூட பெரிய சம்பத்துதான். ஆக, இறைவனை எல்லா நேரமும் ஸ்மரிப்பதுதான் உண்மையான சம்பத்து. அதற்கு மிக எளிமையான வழி, இறை நாமங்களை பஜிப்பதே ஆகும்.

நம் குருநாதரை ஒரு பக்தர் அணுகி தனக்கு ஏற்பட்ட ஒரு சந்தேகத்தை கேட்டார். அவர் குருநாதரிடம், "யம கண்டத்தில் இறைவனின் நாமங்களை கூறலாமா?" என்று கேட்டார். அதற்கு நம் குருநாதர், "என்னை கேட்டால், இறை நாமம் சொல்லாத பொழுதெல்லாம்தான் யம கண்டம்" என்று கூறினார்! கபீர், "சுகமாக இருக்கும்பொழுதே இறைவனின் நாமங்களை சொல்லி அவனை பஜித்தால், துக்கங்களே வராது" என்று கூறுகிறார். இறைவனின் நினைவு வர, துக்கங்கள் வர காத்திராமல், அவன் நாமத்தை சொல்லி நன்மை அடைவதே சால சிறந்தது.

---

## சனாதனப்புதிர் பகுதி 66 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. ப்ரும்மாவினுடைய ஐந்தாவது தலையை தனது நுனி நகத்தினால் கிள்ளியது/அகற்றியது யார்?
2. சிவராத்திரி விரதம் எத்தனை வகைப்படும்?
3. திங்கட்கிழமை - அமாவாசை சேர்ந்து வந்தால் சிவராத்திரியை எப்படி கூறுகிறார்கள்?
4. மாகப்ரதமாதி சிவராத்திரி என்பது என்ன?
5. ஸ்ரீபைரவ மூர்த்தியின் விரதத்தை எப்பொழுது அனுஷ்டிக்க வேண்டும்?
6. பித்ரு பூஜைகள் எந்த புராணத்தில் காணப்படுகின்றது?
7. நாரத புராணத்தில் காணப்படும் பித்ரு பூஜைகள் எந்த ஸூத்ரத்துடன் ஒத்து போகின்றன?
8. அத்தியாயங்கள் 20 முதல் 22 வரை கூர்ம புராணத்தில் எதை விவரிக்கின்றன?
9. கும்பகோணத்தை சுற்றியுள்ள பஞ்சக்ரோச க்ஷேத்திரங்கள் எவை?
10. கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி ஸ்தோத்ரம் எந்த புராணத்தில் காணப்படுகின்றது?

# வீடு தேடி வருவான் விட்டலன் - 8

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

நாரதர், "ஒருநாள் கழித்து கிளம்புவோம். நான் இப்பொழுதுதான் வந்திருக்கிறேன்" என்று சொல்லி பார்க்கிறார். கண்ணன் விடவில்லை. அவன் பரபரக்கிறான்.

"புண்டலீகனின் தரிசனத்தினால் தனக்கு சாந்தியுண்டாகும்" என்கிறான் பகவான். அவன் கிளம்பியவுடன் மற்றவர் வேறு என்ன செய்ய முடியும்? நாரதரும், ருக்மிணியும் அவனுடன் கிளம்புகிறார்கள். கிளம்பி இந்த புண்டலீகன் இருந்த பண்டரீபுரம் வந்து சேர்ந்தனர். வேகமாக வந்தான் கண்ணன். இந்த வீடா? அந்த இடமா? என்று நாரதரிடம் கேள்வி கேட்டு கொண்டே பரபரத்தான். அங்கே இருக்கும் ஒரு குடிசையை காண்பித்து, நாரதர் இதுதான் புண்டலீகனின் வீடு என்கிறார். கண்ணனை பார்த்தவுடன் அவனுக்குப் பின்னால், ஆயிரத்துக்கும் மேலானவர்கள் வந்து விட்டனர்.

சிலர் துவாரகாதிபதி வந்திருக்கிறான். ராணியுடன் வந்திருக்கிறான் என்றனர். சிலர், "அப்படி சொல்லாதே. இவன் மனிதன் இல்லை; பகவான்" என்றனர். இப்படி பலர் பேசியவாறு இருக்க, பகவானோ நாரதருடன் புண்டலீகன் இருந்த குடிசை வாயிலில் போய் நின்றான்.

வீட்டிற்கு ஒருவர் அதிதியாக வந்தால் அவரை உபசரிக்க வேண்டியது தர்மம். கண்ணனை இங்கு புண்டலீகன் உபசரிக்க வேண்டும். ஆனால் அவனோ அப்பொழுது தன் தந்தைக்கு கால் பிடித்து விட்டு கொண்டிருந்தான். அவர் இன்னும் தூங்காமல் இருந்தார். நாரதர் வெளியில் இருந்தபடியே, "புண்டலீகா! யார் வந்திருக்கிறார்கள் என்று பார். பகவான் துவாரகாதிபதி கண்ணன் வந்திருக்கிறான்" என்றார். புண்டலீகன் காதில் அது விழுந்தது. அப்பொழுது தன் பெற்றோரை விட்டுவிட்டு அவனால் வர முடியவில்லை.

சாதாரணமாக வீட்டிற்கு வரும் அதிதியிடம், இனிய வார்த்தைகள் பேசி நல்ல ஆசனம் அளித்து உபசரிக்க வேண்டும்.

இங்கோ பகவானே வந்திருக்கிறான். வந்துள்ள பகவானை உபசரிக்க வேண்டியதும் கடமை. பெற்றோரை விட்டும் அவனால் உடனே வர இயலவில்லை.

அவனோ யாத்திரையின் நடுவில் போட்ட, ஒரு குடிசையில் வாழ்ந்து கொண்டிருப்பவன். அவனிடம் என்ன பொருள் இருக்கும்? சோபா, நாற்காலியா இருக்கும்? வந்த இடத்தில் கொட்டகை போட்டவன் அவன். அவனிடம் ஒன்றும் கிடையாது. அதனால் அவன் ஒரு செங்கல்லை எடுத்து பகவானின் திருவடிகளில் போட்டு, "நான் என் பெற்றோருக்கு சேவை செய்து விட்டு வந்து விடுகிறேன். நீங்கள் இதில் சற்று நில்லுங்கள்" என்று சொல்லி விட்டு, உள்ளே போனான்.

அந்த செங்கல்லின் மேல் பகவானும், ருக்மிணியும் ஏறி நின்றார்கள். நாம் யாராவது செய்யும் காரியத்தை ஆச்சரியமுடன் எட்டி எட்டி பார்த்தால், கைகள் தானாக இடுப்பில் போய் விடும். பகவான் செங்கலில் நின்றபடியே குடிசை வாசல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். புண்டலீகன் கால் பிடித்து விடுவதும், விசிறுவதும் அவன் கண்களில் தெரிந்தது. புண்டலீகன் மிகவும் பொறுமையாகவும், அழகாகவும் செய்ததைக் கண்டு, பகவானின் கண்களில் நீர் அரும்பியது. பகவான் புண்டலீகனின் சேவையை பார்த்து பார்த்து ஆனந்தப்பட்டான். கால் பிடித்துவிட்ட பிறகு தலை வாரிவிட்டான் அவன். அவன் தந்தை தலைவலி என்றார். புண்டலீகன் தலை பிடித்து விட்டான். பகவான் பார்த்து பார்த்து சந்தோஷப்பட்டான்.

புண்டலீகன் எந்த அளவுக்கு அழகாக செய்தான் என்றால், அதை பார்த்த பகவானின் கைகள் அவன் இடுப்பில் போய் விட்டது. ஆச்சரியப்பட்டால் கைகள் இடுப்பிற்கு போகும் அல்லவா? அப்படித்தான்! ருக்மிணி பார்த்தாயா! நாரதரே பார்த்தீரா! நாரதரிடமும் ருக்மிணியிடமும் அருகில் இருந்தவர்களிடமும் புண்டலீகனின் சேவையை சிலாகித்து பகவான் பேசினான். புண்டலீகன் தனது கடமையை முடித்தான். கை, கால்களையும், முகத்தையும் கழுவிக் கொண்டு, குடிசை வாசலுக்கு ஓடி வந்தான்.

(தொடரும்)

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruhim Consulting Private Ltd**

# புராநவா - பெங்களூரு மற்றும் தூத்துக்குடி

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன், வருடாவருடம் காட் இந்தியா பெங்களூரு சத்சங்கத்தினரால் நடத்த பெற்று வரும் **புராநவா 14** மிகவும் வெற்றிகரமாக செப்டம்பர் **6** அன்று St. Joseph Indian Institution Auditoriumஇல் **250** மாணாக்கர்கள் பங்கேற்க சிறப்பாக பெங்களூரில் நடைபெற்றது. திரு.குமார், பெங்களூரு காட் சத்சங்கத்தின்




செயல்பாடுகள் குறித்து முதலில் பேசினார். திரு.அபிஷேக் நாராயண், திரு.விஜய்சுப்ரமண்யம், திரு.குருமூர்த்தி மற்றும் திருமதி ரூபா குருமூர்த்தி இந்த வினா-விடை போட்டியை மிக அழகாக நடத்தி சென்றனர். சாந்தீபனி குருகுல டிரஸ்டின் பிரின்சிபால் ஸ்ரீபாலாஜி மற்றும் ராமானுஜம்ஜி இருவரும் நடுவர்களாக இருந்தனர். Dr. Anil Rao Paila – Dean , Welingkar Institute of Management & Research & Mrs. Devaki Kumar – Principal , Chinmaya Vidyalaya, St.Johns Road, Ulsoor ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணாக்கர்களை ஊக்குவித்து பேசினர். நல்ல போட்டியுடன் முடிவுற்ற இதில் மல்லேஸ்வரம் பூர்ண ப்ரக்ஞா மேல்நிலைப்பள்ளி முதலிடத்தையும், மல்லேஸ்வரம் பவன் இங்கிலீஷ் பள்ளி இரண்டாமிடத்தையும் பெற்றது.


நான்காவது வருடமாக தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்யாகுமரி, விருதுநகர், மதுரை, ராம்நாடு, சிவகங்கை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் **117**பள்ளிகளில் நடந்த போட்டிகளில் இருந்து **28**குழுக்களை சேர்ந்த மாணாக்கர்கள்




தேர்வாகினர். இவர்கள் செப்டம்பர் 8 அன்று தூத்துக்குடி சுப்பையா வித்யாலயத்தில் நடைபெற்ற புராநவா 14 இறுதிப் போட்டியில் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. திருநெல்வேலி சின்மயா வித்யாலயா முதலிடத்தையும், ஜெயேந்திரா கோல்டன் ஜுபிளி மற்றும் புஷ்பலதா வித்யா மந்திர் பள்ளிகள் இரண்டாமிடத்தையும் வென்றன. ராமானுஜம்ஜி மற்றும் டாக்டர்.ஜனனி வாசுதேவன் சென்னையிலிருந்து வந்து கலந்து கொண்டனர். Sri.H.S.Upendra Kamath,M.D & C.E.O, TMB Ltd மற்றும் Smt.A.Sumathi, GM-Asset Optimization, Sterlite Copper சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.




NEW RELEASES



# பாலகர்களுக்கு ஒரு கதை



## எதிரொலி!

குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லக்கூடிய ஒரு உபதேசம், "பக்தனாக இரு; அதற்காக முட்டாளாக இருக்காதே" என்பது. நம் ஸ்வாமிஜியும், "மந்திரம் தந்திரம் யந்திரம் எதற்கும் வசப்பட மாட்டான்; நாமா சொல்லி கதறி அழைத்தால் தாங்கவும் மாட்டான்" என்று பாடியுள்ளார். ஈன்றெடுத்த அன்னையை விட நம் மேல் அன்பு பூண்டவர் கருணையே வடிவான இறைவன். அவரிடம் நம் பிரார்த்தனைகளை செலுத்த மிகவும் எளிதான வழி நாமகீர்த்தனம். யார் யாரோ சொல்வதை கேட்டு, வேறு வழிகளை நாடினோமானால் நாம் ஏமாற நேரிடலாம்.

ஸ்வாமி ஜபானந்தர் என்ற ராமகிருஷ்ண மட துறவியின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம், நமக்கு ஒரு நல்ல பாடத்தை புகட்டுகின்றது. புனித கங்கைக்கரையில் இமயமலை சாரலில் அந்த சாது, ஒரு சமயம் ஜப, தியானங்களில் ஈடுபட்டிருந்தார்.

அப்பொழுது ஒரு புரோகிதர் பலரை அங்கு பூஜை, பரிகாரங்கள் செய்ய அழைத்து வந்தார். அந்த புரோகிதர் மிகவும் பிரபலமானவர். மாயாதேவியே நேரடியாக அவரிடம் பேசுவாள் என்று அந்த ஊரில் பலர் சொல்வதுண்டு.

அவருடன் வந்த குழுவில் ஒரு இளம் தம்பதியும் இருந்தனர். அந்த தம்பதிக்கு ஒரு பெரிய குறை, குழந்தை பேறு இல்லாததே. அதற்காக அவர்கள் பார்க்காத ஜோதிடரோ செய்யாத பரிகாரமோ கிடையாது. இறுதியில் இந்த புரோகிதரின் பெருமையை அறிந்து அங்கு அவருடன் வந்திருந்தனர்.

இங்கு நடக்கும் விஷயங்களை, எல்லாம் தூரத்தில் அமர்ந்தபடி அந்த சாது பார்த்துக் கொண்டிருந்தார்.

புரோகிதர் அந்த தம்பதியிடம், "கவலை வேண்டாம்; நான் சொல்லும் பரிகாரங்களை எல்லாம் செய்தால் போதும்.

குழந்தை நிச்சயமாக பிறக்கும்" என்றவுடன், அந்த தம்பதிகளின் கண்களில் ஆனந்த கண்ணீர் பெருக்கெடுத்தது. சில பூஜைகளை செய்து விட்டு, அவர்களை மலையின் அருகே அழைத்து சென்றார். கம்பீரமான தோரணையில், "உங்களுக்கு என்ன குழந்தை வேண்டும்? பெண்ணா ஆணா? சொல்லுங்கள்! மாயாதேவியிடமே கேட்கிறேன். அவள் பதில் உரைப்பாள்" என்றார். இதை பார்த்துக் கொண்டிருந்த அனைவருக்கும் வியப்பு தாங்கவில்லை.

பயபக்தியுடன் அந்த தம்பதிகள், ஆண்குழந்தையை அருள வேண்டும் என்று வேண்ட, புரோகிதர் உரத்த குரலில் "பெண்ணா ஆணா" என்று வானை நோக்கி கேட்டார். என்ன ஆச்சரியம்! "ஆண்" என்று உடனே பதில் வந்தது. இதையே மூன்று முறை கேட்டு மாயாதேவியிடம் உறுதி செய்து கொண்டார்.

தம்பதிகளோ ஆனந்தக் கூத்தாடினர். புரோகிதருக்கு செய்ய வேண்டிய அனைத்து மரியாதைகளையும் செய்தனர். கூடியிருந்த மக்களோ, அவரது மகிமையை பற்றி பேசி பேசி அதிசயித்தனர்.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சாது மட்டும் சிறியதாக ஒரு புன்முறுவல் பூத்தார். இதை, அந்த தம்பதிகள் மட்டும் பார்த்து விட்டனர்.

மறுநாள் கோபத்துடன் சாதுவை நோக்கி அந்த நபர் வந்தார். "எங்களுடைய கஷ்டத்தை நீங்கள் உணர மாட்டீர்கள். ஒரு துறவிக்கு எப்படி எங்கள் குறை புரியும்? கடவுளாக எங்கள் மேல் கருணை கொண்டு, இங்கு இந்த புரோகிதரை எங்களுக்கு காண்பித்துள்ளார். மாயாதேவியே நேரடியாக அவரிடம் பேசுவதை நீங்களும் பார்த்தீர்கள் அல்லவா! அப்போது ஏன் சிரித்தீர்கள்? எங்கள் மனதை புண்படுத்தி விட்டீர்கள்" என்று புலம்பி தள்ளி விட்டார்.

சாதுவின் முகத்தில் அதே புன்முறுவல். "அதெல்லாம் இருக்கட்டும். உங்களுக்கு நல்லது நடந்தால் சரி. உங்களுக்கு என்ன இனிப்பு பிடிக்கும்?" என்று கேட்க, அந்த நபருக்கு

ஒன்றும் புரியவில்லை. "ஏன் சம்பந்தமில்லாமல் ஏதோ பேசுகிறீர்கள்?" என்று சாதுவிடம் கேட்டனர்.

அப்போது சாது உரத்த குரலில், "எந்த இனிப்பு பிடிக்கும் லட்டுவா, பேடாவா?" என்று கூவ, "பேடா" என்று மாயாதேவியின் குரல் கேட்டது. வந்தவர்களுக்கு மேலும் குழப்பம். மாயாதேவி இவரிடமும் பேசுவாளோ என்று நினைத்தார்.

சாது அவரை அருகில் அழைத்து, "இந்த மாயாதேவி உன்னிடமும் பேசுவாள் நண்பரே! மாயாதேவியின் குரலுக்கு எதிரொலி **(Echo)** என்று பெயர். இந்த மலை பகுதியில் உரத்த குரலில் என்ன சொன்னாலும் எதிரொலிக்கும் என்பது கூடவா தங்களுக்கு தெரியாது. அதிலும் கடைசியாக சொன்ன சொல் நன்றாக கேட்கும். இப்போது புரிந்ததா புரோகிதரின் மஹிமை!" என்று கூறி சிரித்தார்.

---

## சனாதனப்புதிர் பகுதி 66 - விடைகள் -ஆத்ரேயன்

**1.** காலபைரவர் (ஸ்காந்தம்- தக்ஷ காண்டம் - அத்யாயம் 19)

**2.** நான்கு வகைப்படும்.

**3.** யோகஜம் சிவராத்திரி என்று சொல்கிறார்கள்.

**4.** மாக மாதத்தில் சுக்லபக்ஷ ப்ரதமை முதல் த்ரயோதசி வரை வ்ரதம் இருந்து, சதுர்தசி தினத்தில் த்யானம்; இரவின் 4ஜாமங்களிலும் பூஜை செய்வது என்பதை மாகப் பிரதிமாதி சிவராத்திரி என்கிறார்கள்.

**5.** சூரியன் மகர ராசியில் இருக்கும்பொழுது (தை மாதத்தில்) முதல் ஞாயிற்றுக்கிழமையிலும் சித்திரை, ஐப்பசி மாதங்களில் இரு பரணி நக்ஷத்திரங்களிலும் அனுஷ்டிக்க வேண்டும்.

**6.** அக்னி, கருட, கூர்ம, பத்ம, விஷ்ணு புராணங்களில் ...

**7.** காத்யாயன ஸூத்ரம் மற்றும் யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதி

**8.** பித்ரு பூஜனம் செய்யும் முறைகளை

**9.** மத்தியார்ஜுனம் - திருவிடைமருதூர், சம்பகாரண்யம் - திருநாகேச்சுரம், ருத்ராக்ஷண்யம் - தாராசுரம், குஹாசலம் - ஸ்வாமி மலை, பாடலீவனம் - கருப்பூர்.

**10.** பவிஷ்யோத்தர புராணம் - க்ஷேத்ர வைபவ காண்டம் - பிரும்ம நாரத ஸம்வாதம்- 50வது அத்யாயம்

**செப்டம்பர்** பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின் ஜன்ம பூமியான சேங்கனூரில், 7.9.2014 அன்று, மாலை 6மணி அளவில் ஊர் எல்லையில் சதாபிஷேக வைபவ தோரண வாயிலும், அவருடைய ஜன்மஸ்தானில் சத்சங்க மண்டபமும், ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் திருக்கரங்களால், திறந்து வைக்கப்பட்டது.

சண்டேஸ்வர நாயனார் அவதார ஸ்தலமான சேங்கனூரில் அமைந்துள்ள, ஸ்ரீஸகிதேவி ஸமேத ஸ்ரீசக்திகிரிஸ்வரர் சிவாலயம் திருப்பணி செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் முன்னிலையில், 12.9.2014 அன்று காலை 9மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது.

**செப்டம்பர் 8-** கோவிந்தபுரம் சைதன்யகுடீரத்தில் பிரதிஷ்டா தின வைபவத்தை ஒட்டி அகண்டமாக காலை 6 முதல் மாலை 6மணி வரை மஹாமந்திர கீர்த்தனமும் அன்னதானமும் நடைபெற்றது.

**ஆகஸ்டு 29** செங்கல்பட்டு அருகே ஆத்தூரில், ஸ்ரீசதுர்வேத வித்யா கணபதி வேதாஸ்ரமத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

**ஆகஸ்டு 25-** ஆந்திரா ராஜமுந்திரி வேதசபையில் ஆகஸ்டு மாதத்தில் நடந்த பரீக்ஷையில் தேர்ச்சி பெற்ற நமது பாடசாலை அத்யாபகர் ப்ரும்மஸ்ரீ சுப்ரமண்ய அவதானி அவர்களுக்கு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்வர்ண பதக்கம் அளித்து கௌரவித்தார்கள்.

மஹாராஷ்டிர முன்னாள் மந்திரி ஸ்ரீபிரஷாந்த் ஹிரே அவர்கள் மொழிபெயர்த்த ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் புத்தகங்கள் "ஆனந்தாச பஹர் - **Blissful Blossoms**", "அத: ப்ரேரணா - **As it strikes me**", "ஆனந்தா ச அந்தராங்கே - **Infinite ways to Infinite Bliss**", "ப்ரஸ்னமாம்பாலிகடே - **Answers and Beyond**", "சஹஜ பரஸ்ன சஹஜ உத்தர - **Simple Questions & Simple Answers**" ஆகியவற்றின் பதிப்புகளை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வெளியிட்டார்கள்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



*- ஜனனி*

*ஸ்ரீஸசீநந்தனதாஸ் பாபா* **-2**

ஸ்ரீ ராதா ராணியிடம், ஸ்ரீஸசீநந்தனதாஸ் பாபாவிற்கு, தீவிரமான நிஷ்டையிருந்தது. அவளுக்கு விதவிதமாக ஸேவை செய்வார் பாபா. ஹோலி பண்டிகை அன்று பானுஸரோவரின் அவரது குடிசையிலிருந்து ஆரம்பித்து ஸ்ரீஜியின் கோவில் வரை, காலை முதல் மாலை வரை, பெருக்கிக் கொண்டேயிருப்பார். ஸ்ரீஜியின் ஸ்ருங்காரத்திற்காக, பூக்களை சேகரிப்பார். சில ஸமயங்களில், பர்ஸானாவில் பூவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். அச்சமயங்களில், அவர் இரவோடு இரவாக நடந்தே ப்ருந்தாவனம் செல்வார். அங்கிருந்து பூக்களை சேகரித்து காலையில் தொடுத்து, ஸ்ரீஜிக்கு ஸமர்ப்பிப்பார். ஒரு முறை கோவர்தனம் அருகில், ஒரு நந்தவனத்தில் பாபா பல வண்ணங்களில் வாஸனைப் பூக்கள் பூத்திருப்பதை பார்த்தார். உடனே அவருக்கு அந்த பூக்களைக் கொண்டு, ஸ்ரீஜிக்கு ஒரு மாலை தொடுத்து போட வேண்டுமென்ற ஆசை உதித்தது. அந்த தோட்டத்தின் முதலாளியிடம் பூக்களை பறிக்க அனுமதி கோரினார். அந்த முதலாளியோ மறுத்துவிட்டார். அன்று இரவு, பாபா அந்த தோட்டத்தின் அருகிலுள்ள, ஒரு திண்ணையிலேயே படுத்துவிட்டார். இரவு 10 மணி அளவில், அங்கு சில திருடர்கள் வந்தார்கள். பாபாவை கண்டதும் அந்த கூட்டத்தின் தலைவன் பாபாவை உலுக்கி எழுப்பினான். அவரிடம், ‘நீ யார்?’ என்று கேட்டான்.

பாபா, ‘நான் ஒரு திருடன்’ என்றார்.

‘திருடனா? எங்கே திருடுவாய்?’.

‘இந்த தோட்டத்தில்’.

‘இந்த தோட்டத்தில் என்ன இருக்கிறது?’.

‘பெரிய அழகிய பூக்கள் பூத்திருக்கின்றன’.

"பூக்களை திருடுவதனால் உன்னுடைய வயிறு நிரம்பிவிடுமா?"

"ஆம்! நிரம்பும்"

"எப்படி? அதை விற்பனை செய்து உனக்கு என்ன கிடைக்கும்?"

"அதை விற்கமாட்டேன்! இந்த புஷ்பங்களை மாலையாக தொடுத்து ஸ்ரீஜீ(ராதை)க்கு ஸமர்ப்பணம் செய்வேன். ஸ்ரீஜீ ப்ரஸன்னமாவாள். அதனால், பவரோகத்திலிருந்து நான் விடுபெறுவேன். ஜன்ம ஜன்மங்களுக்கும் எனது பசி போய்விடும்!"

பாபாவின் இந்த வார்த்தைகள் திருடர்களின் மனதில் கூட ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் பாபாவிடம், "பாபா! வாருங்கள்! நாங்களும் உங்களுக்கு இந்த திருட்டில் உதவுகிறோம்" என்று கூறினார்கள்.

அவர்களின் உதவியோடு, பாபா பூக்களை பறித்து, தனது மனோ வாஞ்சையை, பூர்த்தி செய்து கொண்டார்.

பாபாவின் க்ஷண நேர ஸங்கத்தினாலோ, அல்லது ஸ்ரீஜீயின் புஷ்ப கைங்கர்யத்திற்காக ஒரு முறை திருடியதாலோ இவற்றுள் ஏதோ ஒன்றின் பலனாக, அந்த திருடர்கள் தாங்கள் செய்ய வந்த திருட்டை மறந்தார்கள். இதன்பின், அவர்கள் அடிக்கடி பாபாவின் குடிலுக்கு வந்து, அவரை தரிசனம் செய்தார்கள். அவர்களுள், ஒரு பெரிய பரிணாமம் ஏற்பட்டது. திருடர்களாக இருந்த அவர்கள், பக்தர்களாகி விட்டார்கள்.

பாபா, நாள் முழுவதும், தனது குடிலிலேயே அமர்ந்து பஜனை செய்வார். சாயங்காலம் ஒரு முறை, மதுகரிக்கு செல்வார். மதுகரியில் எப்போதாவது அதிகமாக ரொட்டிகள் கிடைத்தால், அதை காயவைத்து எடுத்து வைத்துக் கொள்வார். பஜனையில் ஆழ்ந்துவிட்டபடியால், என்றாவது மதுகரிக்கு செல்ல இஷ்டப்படாவிட்டால் இந்த காய்ந்த ரொட்டிகளையே மென்று முழுங்கிவிடுவார். வயதான காலத்தில் இந்த காய்ந்த ரொட்டிகளையே பொடியாக்கி, அதில் சிறிது உப்பும் தண்ணீரும் சேர்த்து சிறிய உருண்டைகளாக்கி, அதை விழுங்கிவிடுவார். நாவிற்கு சுவைக்க ஏதாவது வேண்டும் என்று தோன்றினால், "ராயீ ராயீ" (ராதே ராதே) என்று சொல்லிக்கொள்வார். இதில் அவருக்கு கிடைக்கும் சுவையில், அவர் பசி-தாகம் எல்லாவற்றையும் மறந்துவிடுவார். அவர் அடிக்கடி, "ஸம்ஸார விஷயம் எனும் புழுதியுடன், நான் இனி விளையாடமாட்டேன், ஏனென்றால் என் மனம், ஹரி நாமாம்ருதம் எனும் கடலில் மூழ்கியிருக்கிறது. இனி நான் பெற்ற தாயிடமும் செல்ல மாட்டேன்; பசித்தாலும் சாப்பிட மாட்டேன்; ஏனெனில் ராதையின் நாமம் என் பசி-தாகம் எல்லாவற்றையும் நீக்கிவிட்டது" என்று பொருள்படும்படியான ஒரு அழகிய வங்காள பாட்டை பாடுவார்.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 132*

—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்




சைவ, வைணவ கோயில்களை இணைக்கும் விழாவாக சித்திரை பெருவிழா இன்றும் சிறப்புடன் மதுரையில் கொண்டாடப் பெறுகிறது.

அன்றும் இன்றும், வைணவம் என்னும் குழந்தையை தாலாட்டி வளர்த்த பெருமைக்குரியது, மதுரையும் பாண்டிய நாடும் எனல் மிகையாகாது.

மதுரை மாநகரின் தலையாய வைணவக்கோயில் இதுவே. மதுரை திருநகரின் புறம்பே உள்ள அழகர்கோயில் எனப்பெறும் திருமாலிருஞ்சோலைமலைக்கு அடுத்தபடி மதுரை நகரின் உள்ளே உள்ள சிறப்பு மிகுந்த திவ்யதேசங்களுள் ஒன்று இக்கோயில் ஆகும்.

கூடலழகர் கோயில் என்று அழைக்க பெறும் இக்கோயிலை பற்றிய பாடலே பரிபாடல் ஏழாம் பாடல் ஆகும். இக்கோயில் உள்ள பகுதி இருந்தையூர் என்று அக்காலத்து பெயர் இருக்கலாம்.



இருந்தையூர் அமர்ந்த செல்வ என்று பரிபாடலில் இது குறிப்பிட பெறுகின்றது. இருந்த வளமுடையார் கோயில் என இக்கோயில் வழங்க பெற்றதாக அறிகிறோம்.

இருந்த வளமுடையார் இருக்கும் ஊர் இருந்தையூர் என மருவி வழங்கி இருக்கலாம்.

வெற்றிலைப்பேட்டைக்கு அருகே, முனிச்சாலை என்னும் இடத்தில், அந்தரவானம் தண்ணீர் பந்தல் தெரு என்று ஒரு தெரு உள்ளது. இது கூடல் அழகர் பெருமானுக்கு அந்தர வானத்து எம்பெருமான் என்னும் பெயர் அமைந்திருந்ததற்கு சான்றாக அமைகிறது.

கூடல் அழகர் கோவில், மேலை மாசி வீதி, தெற்கு மாசி வீதி இரு வீதிகளும் சந்திக்கும் இடத்தில் மதுரை மாநகரின் தென்மேற்கு மூலையில் உள்ளது. இங்கே கோயில் கொண்டுள்ள எம்பெருமான் **1.**இருந்த கோலம், **2.**நின்ற கோலம், **3.**கிடந்த கோலம் ஆகிய மூவகை நிலைகளிலும் காட்சி தந்து கூடலழகர் என்னும் பெயருடன், ஸ்ரீதேவி, பூமாதேவி என்னும் தாயாருடன் எழுந்தருளி உள்ளார்.

இருந்த கோலமாகிய மூலவர் கோயிலின் மீது அஷ்டாங்க விமானம் கட்டப்பட்டு உள்ளது. முதல் மாடியில் நெடுமாலின் நின்ற கோலத்தையும், இரண்டாம் மாடியில் பள்ளி கொண்ட திருக்கோலத்தையும் காணலாம்.

இப்பெருமான் சன்னதிக்கு தென்பால் மதுரவல்லி தாயார் சன்னதி, வடபால் ஆண்டாள் சன்னதி அமைந்துள்ளன. இக்கோயிலை திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், திருமழிசையாழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளனர்.

குரவைக்கூத்தின் இறுதியில் மாதரி நெடுமாலை வழிபட சென்றதாக, சிலப்பதிகாரம் சொல்கிறது. அவள் அவ்வாறு வழிபட்ட திருமாலின் திருப்பெயர், "இருந்த வளமுடையார்" என்று அரும்பத உரையாசிரியர் கூறுவர். "அந்தரவானத்து எம்பெருமான்" என்று அடியார்க்கு நல்லார் கூறுவர்.

இருந்த கோலத்தில் காணப்பெறும் பெருமான் ஸ்ரீ இருந்த வளம் உடையார், விமானத்தில் காணப்பெறும் பெருமான் அந்தர வானத்தெம்பெருமான் - எனவே இவ்விரண்டு பெயர்களும் கூடல் அழகரையே குறிப்பன என்பதில் ஐயம் இல்லை. (தொடரும்)

# ஸ்ரீ மஹாபெரியவாளின் கருணை

- ப்ரும்மஸ்ரீ பம்மல் ஏகாம்பரம்

ப்ரும்மஸ்ரீ S . R .கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளை தெரியாதவர்களே இருக்க முடியாது. சமீபகாலத்தில் நம்மிடையே வாழ்ந்த மஹாவித்வான். சரஸ்வதியின் அம்சம் என்றாலும் மிகையாகாது. அவருக்கு ஒரு சமயம் சித்தத்தில் பிரமம் ஏற்பட்டு விட்டது. எப்பொழுதும் RESTLESS ஆக இருந்தார். முடியாமல் ஏதாவது புலம்பிக் கொண்டே இருப்பார். சொல்ல முடியாத ஒரு அவஸ்தையை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

அதோடு மட்டுமல்லாமல், அவருக்கு எதுவுமே சரியாக ஞாபகமும் இல்லை. அவ்வளவு பெரிய வித்வானுக்கு படித்தது எதுவும் சரியாக ஞாபகத்தில் இல்லை. அவரை பார்ப்பவர்களுக்கு, இவ்வளவு பெரிய வித்வான் இப்படி சிரமப்படுவதை பார்ப்பதற்கு, மிகவும் பாவமாகவும் கவலையாகவும் இருக்கும்.

மஹாபெரியவாள் மஹாராஷ்டிர மாநிலத்தில் சிந்துபல் என்ற கிராமத்தில் முகாம் இட்டிருந்தார்கள். அப்பொழுது S . R .கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளையும், அவருடைய மனைவியையும் அவர்களுடைய குடும்பத்தினர் மஹாபெரியவாள் தரிசனத்திற்கு அழைத்து வந்திருந்தார்கள். அவர்கள் வந்திருந்த சமயம், ஸ்ரீபெரியவாள் என்னிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

சாஸ்திரிகளை பார்த்தவுடன், ஸ்ரீபெரியவாள் என்னிடம், "அவருக்கு ஆசனம் போட்டு, உட்கார்த்தி வை" என்றார்கள். அவரும் குடும்பத்துடன் நமஸ்காரம் செய்து விட்டு, அமர்ந்து கொண்டார். சாஸ்திரிகள் மட்டும் நிலை கொள்ளாமல் ஒருமாதிரியாக தவித்துக் கொண்டிருந்தார்கள். உடன் வந்தவர்களிடம் சாஸ்திரிகளின் உடல்நிலையையும், மன நிலையையும் பற்றி பெரியவாள் கேட்டு தெரிந்து கொண்டார்கள். பிறகு என்னிடம் அவருக்கு உடம்பு எப்படி உள்ளது? பழைய பாடங்கள் எல்லாம் ஞாபகத்தில் உள்ளதா? பாடம் சொல்ல முடியுமா என்று கேட்கச் சொன்னார்கள்.

நானும் ஸ்ரீபெரியவாள் சொல்லியபடியே அவரிடம் கேட்டேன். அவரும் மெல்லிய குரலில், "கொஞ்சம் ஞாபகம் இருக்கு; ஆனால் உடனே மறந்து விடும் பாடம்; சொல்ல முடியாது" என்று தடுமாறியபடியே பேசினார். நானும் அவர் சொன்னதை கேட்டு, அப்படியே பெரியவாளிடம் சொன்னேன்.

ஸ்ரீபெரியவாள் சிறிது நேரம் தன் கண்களால் அவரை மௌனமாக உற்று பார்த்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து, என்னிடம் இரண்டு உயர்ந்த ரக சால்வைகளை கொண்டு வர சொன்னார்கள். அதன்படியே நானும் செய்தேன்.

அதில் ஒன்றை, "தங்கள் உடல் நலம் பரிபூரணமாக குணம் அடைய வேண்டும் என்பதற்காக" என்று சொல்லி போர்த்த சொன்னார்கள். நானும் அதன்படி செய்தேன். மற்றொரு சால்வையையும் எடுத்து என்னிடம் கொடுத்து, அவரிடம், "தங்களுக்கு மறந்து போன எல்லா பாடங்களும் ஞாபகம் வந்து பழையபடி பாடம் சொல்ல வேண்டும் என்பதற்காக" என்று சொல்லி போர்த்த சொன்னார்கள். நானும் ஸ்ரீபெரியவாள் உத்திரவுப்படியே செய்தேன். அவரும் ஸ்ரீபெரியவாள் சன்னதியில் சிறிது நேரம் அமர்ந்திருந்தார்கள். பிறகு ஒரு மாதுளம்பழத்தை அவருக்கு பிரசாதமாக கொடுத்து அனுப்பி வைத்தார்கள். அதன்பிறகு, அவர் பரிபூரணமாக குணம் அடைந்ததோடு மட்டுமல்லாமல், பாலபெரியவாளுக்கு தர்க்கமும் பாஷ்ய பாடமும் சொன்னார். காஞ்சி மடத்தில் ஸ்ரீபெரியவாள் சன்னதியிலேயே, காசி மஹாராஜாவின் முன்னிலையில் வாரணாஸி யுனிவர்சிட்டியின் ரிஜிஸ்டிரார் வந்து, "மஹாமஹோபாத்யாய" என்ற உயர்ந்த விருதும் அளிக்கப்பட்டது.

மனிதர்களுக்கு இரண்டு விதமான ரோகங்கள் உண்டு. சரீரத்திற்கு ஏற்படும் தலைவலி முதல் புற்று நோய் வரையில் எல்லாவற்றிற்கும் வியாதி என்று பெயர். மனதில் ஏற்படும் **DEPRESSION** முதல் புத்திஸ்வாதீனமில்லாத நிலைவரையில் எல்லாவற்றிற்கும் ஆதி என்று பெயர். வியாதியை மருத்துவர்கள் குணப்படுத்தி விடுவார்கள். ஆதியை தெய்வம்தான் குணப்படுத்த முடியும். அப்படித்தான் மஹாபண்டிதருக்கு வந்த மஹாரோகத்தை, மஹாபெரியவாள் ஒரு நொடியில், எந்த மருந்து மற்றும் பரிகாரமும் இல்லாமல் தன் அருள் ஒன்றினாலேயே சரி செய்து வைத்தார்.

(நிகழ்வுகள் தொடரும்)

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- ஒரு வருட சந்தா மட்டுமே பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம்

| | |
|---|---|
| ஏகாதசி | அக்டோபர் 4, 19 நவம்பர் 3, 18 |
| செப் 24 காலை | பெங்களூரு ஸீதாராம ஹால் க்ரஹப்ரவேசம் |
| மாலை | சென்னை புவனேஸ்வரி அம்மன் கோவில் |
| செப் 25 - அக் 1 | சுந்தர ஆஞ்சநேயர் கோவில், பெங்களூரு |
| அக் 3 | ஸ்ரீஸ்ரீநிவாச பெருமாள் ப்ரதிஷ்டாதினம் |
| அக் 5 | 6PM - செங்கல்பட்டு |
| அக் 7 | சோளிங்கர் ராமமூர்த்தி மஹாலில் சத்சங்கம் 4-6PM |
| அக் 24 | ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரம் |


ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.